உ

சிவமயம்




# நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் புகழ்மாலை

ஆக்கியோன்

திரு.சிதம்பரப்பிள்ளை பசுபதி

(குடாநீரூரான்)



நாகதம்பிரான் மூலவர்

# பூர்வீக நாகதம்பிரான் புகழ்மாலை



ஆக்கியோன்
திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி
(குடாநீரூரான்)

நூலின் பெயர் :- நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் புகழ்மாலை

நூல் ஆசிரியர் :- திரு.சிதம்பரப்பிள்ளை பசுபதி

முகவரி :- குடராப்பு நாகர்கோவில்

தற்போதைய முகவரி :- "சிவபவனம்"
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

உரிமை :- நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரானுக்கே

முதற்பதிப்பு :- பெப்ரவரி 2011

பக்கங்கள் :- 32

பதிப்பகம் :- குளோபல் கணணிப்பதிப்பகம்
சாரையடி, பருத்தித்துறை.

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியர் துன்னையூர் சிவஸ்ரீ.க.சிவசண்முகக்குருக்கள் அவர்கள் இலண்டனிலிருந்து வழங்கிய

## ஆசி உரை

ஈழத்திருநாட்டில் நாகர்கோவில் எனும் பதியில் வீற்றிருந்து அருள்புரியும் நாகதம்பிரான். திருவருள் புகழ்மாலையாக வெளிவருவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். புராண விரிவுரைகளில் அனுபவமிக்கவராகத் திகழும் "சிதம்பரப்பிள்ளை பசுபதி" அவர்கள் மலர் ஆக்கப் பணியை மேற்கொள்வது மகிழ்ச்சிக்குரியது.

இம்மலரானது உலகெங்கும் பரந்து வாழும் நாகதம்பிரான் அடியார்கள் மனம் மகிழவும் மிக விரைவில் எம் பெருமானின் பெரும்புகழ் ஒலிவடிவில் வெளி வரவும் நூலாசிரியர் ஆலய தர்மகர்த்தா பரிபாலனசபையினர் மற்றும் அனைவரும் நீடித்து வாழவும் நாகதம்பிரான் திருவருள் வேண்டி அவர் திருப்பாதம் பணிந்து எனது நல் ஆசிகளை நல்குகின்றேன்.

*நாகதம்பிரான் தேவஸ்தானம்*
*நாகர்கோவில்*
*01.02.2011*

*சிவஸ்ரீ.க.சிவசண்முகக்குருக்கள்*
*பிரதம சிவாச்சாரியார்*

## வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு.நடராசா திருலிங்கநாதன் அவர்களின் பாராட்டுரை

எனது அயலூரான குடாரப்பினை சொந்த இடமாகக் கொண்ட திரு.சி.பசுபதி அவர்கள் "எங்கள் கோவிலில் புராணம் படிக்கவரும் சிதம்பரப்பிள்ளை அண்ணனின் மகன்" என எனது சிறுவயதில் எனது தந்தையாரால் அறிமுகப்படுத்தப்பட்டவர். இவர் அரச சேவையில் எமது பிரிவின் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றியமை உட்பட பல பதவிகளை வகித்து நாட்டிற்கு சேவை செய்ததோடல்லாமல் தனது தந்தையாரைப் போன்று புராணபடனங்களை முறையாகப் பயின்று அதனை கோவில்களில் படிப்பவர். இதனைப்போன்றே இவர் தமிழ்ப் பாரம்பரிய கலைகளைக் கட்டிக்காப்பதிலும் ஆர்வமுடையவர் என்பதற்கு இவர் நாட்டுக் கூத்துக்களைப் பாத்திரமேற்று நடித்தமை சிறந்த எடுத்துக்காட்டாகும். இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் கோவிலின் சிறப்பினையும் அதன் அயலில் உள்ள கோவில்களின் சிறப்பினையும் பாடி நூலுருவில் வெளிக்கொணர முற்பட்டிருப்பது பாராட்டப்படவேண்டியது மாத்திரமின்றி காலத்தின் தேவையறிந்து செய்த சிறந்த கைங்கரியமாகும். ஏனெனில் நாகர்கோவில் பிரதேசம் பல நெருக்கடிகளை சந்தித்து அதன் இயல்பை இழந்திருக்கின்ற இன்றைய நிலையில் அதன் கடந்த காலச் சிறப்புக்களை ஆவணமாக்க வேண்டியது அவசியமானதாகும். இம் முயற்சியுடன் மட்டும் நின்று விடாது தனது ஓய்வுகாலத்தில் எமது பிரதேசத்தின் வழக்காறுகளை ஆவணப்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். மேலும் இவரது சேவைக்கு தேவையான சக்தியையும் அருளையும் வழங்க இறைவனை பிரார்த்திக்கிறேன்.

நெல்லியான்
செம்பியன்பற்று
2011.01.27

திரு.ந.திருலிங்கநாதன்
உதவி அரசாங்க அதிபர்

**முந்நாள் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரும் தற்போது காரைநகர் உதவியரசாங்க அதிபருமாகிய கவிஞர் உயர்திரு.த.ஜெயசீலன் அவர்கள் வழங்கிய புகழ்மாலை ஆய்வும், வாழ்த்துரையும்**

---

நாகர் கோவிற் பதியதன் பூர்வீக
நாகதம் பிரானின் மாலையை
பாடினார் குடாநீரூரான்..... யான் அதைப்
பார்த்துப் பரவசித் துணர்ந்துமே வாழ்த்தினேன்!
நாகர் கோவிலின் மூர்த்தியும் கீர்த்தியும்,
நடந்த நிகழ்வு, சரித்திரம், அற்புதம்
யாவையும்...... எழில் யாப்பினில் யாவரும்
இரசித்து இன்புற யாத்துளார் வாழ்கவே!

மேளம் கொட்டுதல் போன்ற நற் சந்தத்தில்
'வெண்பா'.... 'ஆறு' மற்றும் 'பதினாறு'
சீர்விருத்தத்தில் பாடிய பாத்தொடை
சிறந்த சொல், பொருள், மின்னப் பொலிந்தது!
ஓசைக் கட்டுள் மடக்கி.....இவ்ஆலய
உண்மை வரலாற்றைச் சுவைபடச் சொல்லவும்
ஆகஹா கவிநயப் பயனி றைந்துள
அரியபாப் பொங்கல் புவிக்குக் கிடைத்தது!

கோவிற் சூழலைப் பாடிய பாக்களில்
கொட்டுதே சுவை! கம்பனின் வர்ணனை
போலிருக்கவை! தொடர்பவை.....ஆலயப்
புதுமை, வழமை, மகிமையைக் கூறுது!
யாவர் காத்து வளர்த்தவர்? அந்நியர்
யாரெவர் வந்து பணிந்தனர்? பாம்பினால்
தீண்டப்படுபவர் மீளும் கதை, எல்லாஞ்
செப்பும் சிந்து..... நம் நெஞ்சை பிணிக்குது!

'காவல் தெய்வங்கள்', 'பனுவல் பலன்'....தனைக்
காட்டும் கவிதைகள் நுட்பம் பொதிந்தவை!
ஆலயக்கதை தேர்ந்தோர்க்கிப் பா முற்றும்
ஆன்ம அனுபவம் மென்மேலும் சேர்ப்பவை!
நாகம் தான் 'நம் ஆதி இறை' என்று
நவின்று..... தமிழர் வணங்கக் கவிசெய்தார்!
வாழ்க இப்புகழ் மாலை..... இறையருள்
வாழ்த்தும் நிஜம் 'இது' வாழும் நிரந்தரம்!

**உதவி அரசாங்க அதிபர் பணிமனை** **த.ஜெயசீலன்**
**காரைநகர்** **உதவி அரசாங்க அதிபர்**
**2011.01.01**

## சாற்றுகவி

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் தேவஸ்தான அறங்காவலர்/ தலைவர் திரு.முருகர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் வழங்கியது.

நல்ல பாம்புருவமாய் நாக நகர் நண்ணியே
நலம் தரும் நாகர் இறைமேல்
நவின்றவிப் புகழ்மாலை நாட்டினர் போற்றியே
நவின்றிடல் வேண்டுமென்று
சொல்லெலாம் தேடியே சுந்தரப்பாவினால்
சுவைபடவிரித்த அன்பன்
தொண்டனாயறிஞனாய் தோன்றியவர் குடியதாம்
தோமில் குடாரப்பில் வந்தோன்
வல்லனாய் தமிழ் சைவ புராண இசை ஓங்கவே
வளர்த்திடும் கலைஞனாகி
வாழ்ந்திடு சிதம்பரப் பிள்ளையின் மைந்தனாய்
வந்த பசுபதியாகியோன்
எல்லாரும் பாடும்வகை இயம்பிய இப் பாடல்கள்
எங்கள் இறை தம்பிரானின்
இனிதான பாதமலரடி மீதிருக்குமென
என்றும் நாம் போற்றுவோமே.

**நாகதம்பிரான் தேவஸ்தானம்**
**நாகர்கோவில்**
**01.02.2011**

**மு.சிதம்பரப்பிள்ளை**
**நிரந்தரத் தலைவர்**
**பிரதம வௌராணிகர்**

## சிறப்புப் பாயிரம்

சீர்மேவு செந்தமிழ் பாவலன் பசுபதி
செப்புதமிழ் கற்குந் தோறும்
தேனினொடு கன்னலும் தீங்கனிச்சாறுமாய்
தேக்கிப் பிழிந்தெடுத்து
ஊர்மேவு நாக நகர் கோவிலுறை தம்பிரான்
உளத்தில் அருள் கூரும் வண்ணம்
உற்றதொரு மூர்த்தியும் தீர்த்தமும் தலமுமென
உள்ளத்தெழுந்த மகிழ்வை
பார்மேவு பாவலர்கள் படித்து படித் தேத்தி
பகரரிய புகழ் மாலையாம்
பாடிக்கொடுத்தனன் படிப்பவர்கள் அருள் பெற்று
பவவினை வேரறுத்து
ஏர்மேவுமைந்து தலை நாகதம்பிரானினருள்
இயல்பாக கை கூடவும்
இதுபோன்ற பல நூல்கள் ஆக்கவும் போற்றவும்
இவன் வாழ்வு மலர்வதாக.

**திரு.வ.கோவிந்தபிள்ளை**
**அவர்கள்**
**பிரதம பௌராணிகர்**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

**நல்லூர்**
**யாழ்ப்பாணம்.**
**01.01.2011**

உ
சிவமயம்

## என்னுரை

நாகதம்பிரானின் பெருமையை புகழ்மாலையாக பாட வேண்டும் என்ற எண்ணத்தினை பூர்த்தி செய்து என்னை இப் பவத்தில் சேரா நெறிகாட்டிய விநாயகப் பெருமானின் பெருங்கருணையை வியந்து பணிகின்றேன்.

உலகில் முதன்மையும் முழுமையும் வாய்ந்தது சைவத் தமிழ் நெறி என்பதில் அசையாத நம்பிக்கை உடையவனாதலில் அவனருளாலே அவன்தாள் வணங்கிப் பாடப்பெற்ற இச்சிறுநூல் நாகதம்பிரானின் அருட் கடாட்சத்தில் மலர்ந்த மலராகும். நாகதம்பிரானின் திருவருள் பொலிவு பெரும் சமுத்திரமாகும். அதில் சிந்திய சிறுதுளியின் சிந்தலே இப்பாடல்களாக அமைந்தது எனலாம்.

விநாயகரையும் நாகதம்பிரானையும் வணங்கியும் வேண்டியும், கோயிலும் சூழலும், மூர்த்தியும் கீர்த்தியுமாகவும் காவல் தெய்வங்களின் சிறப்பினையும் நான் கண்டு கேட்டு உணர்ந்தவற்றினை பழமையுடன் பாடி ஆனந்தித்ததினை "யாம் பெற்ற இன்பம் பெறுக, இவ்வையகம்" என்பதற்கமைய நாகதம்பிரான் அடியவர்க்கு வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச்சிறு நூலை எனது தந்தையும், குருவும், தெய்வமுமாக நின்று என்னை ஆண்டு அருள் நெறிப் படுத்துகின்ற அமரர் முருகேசு சிதம்பரப்பிள்ளை அவர்களுக்கும் என்னை

இடையில் தவிக்கவிட்டு நன்நெறிகாட்டி அமரத்துவமடைந்த எனது இளைய மகன் அருட்செல்வன் பசுபதி சிவவாசன் அவர்களுக்கும் காணிக்கை அணிகலன்களாக்கி அவர்கள் திருப்பாதங்களில் புனைந்து பூரிப்படைகிறேன்.

இந்நூலினால் கிடைக்கப்பெறும் சன்மானங்கள் அனைத்தும் நாகதம்பிரானின் பாத கமலங்களுக்கே சமர்ப்பணம் செய்கின்றேன். "ஒன்றறியாப் புன்பாடல் உவந்தருள புவிமீது அன்று செய்த தவமறியேன்" என்ற பாடல் வரிகளுக்கமைய இதனை படித்து ஏற்று ஆக்கம் பெற உதவிய அன்புள்ளம் கொண்ட எனது உறவுகளுக்கும், ஆசியுரை, பாராட்டுரை, ஆய்வுரை, சாற்றுகவி அருளிச் சிறப்பித்த அறிஞர் பெருமக்களுக்கும், நூல் வெளியீட்டு விழாவினை சிறப்புற செய்த நாகதம்பிரான் ஆலய பரிபாலன அறங்காவல் சபையினருக்கும் எனது நன்றிகள் என்றும் உரியனவாகும்.

*"நன்றி சொற்களில் அமைவ தொன்றன்று"*
*எல்லாருக்கும் நாகதம்பிரானின் திருஅருள் பெருகுக என்று பிரார்த்திப்போமாக.*

*வாழ்க சைவம் வளர்க தமிழ்*

**குடாரப்பூர்**
**நாகர்கோவில்**
**2011.01.20**

**அன்புடன்**
**சி.பசுபதி**
**(குடாநீரூரான்)**

உ
சிவமயம்

# நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் புகழ்மாலை



## வணக்கமும் வேண்டுதலும்

### வெண்பா

### காப்பு

முப்பழமும் தேனும் முதுகன்னல் பாலினுடன்
கைப்பொரியும் பாகும் கலந்திடுவேன் - மெய்ப்பொருளே
நாகநகர் மேவுமெழில் நாதன் புகழ்பாட
வேழமுக வித்தகனே வா.

எந்தை பெருமான் இறையே அரவடிவே
முந்தைவினை போக்கிநான் முற்றேறச் - சிந்தைதனில்
உந்தன் திறன்பாட உன்னினேன் என்னுளத்திற்
சந்தத் தமிழ்தந்து சார்

# வேண்டுதல்
## சந்தப்பா

ஓதிடும் வடமராட்சி கிழக்கினில் உள்ள ஊரில்
தீதகல் நாகர்கோவில் சிறந்திடு பதியை ஆளும்
நாதனின் பெருமைகூற நாடினேன் நவின்ற பாவில்
மோதிடுங் குற்றம் நீக்கி உளங் கொள்வீர ஊருள்ளீரே.

அல்லவை தேயத்தேய அறம்பல பெருகும் என்பர்
நல்லவை, நாடிநானும் நயந்தெடுத் தோதும் சொல்லில்
பல்வகைக் குற்றம் தன்னை பாலனே புரிந்தான் என்று
சொல்லியே மகிழ்வீர் எந்தன் சுற்றமா யுற்றுள்ளீரே.

செந்தமிழ் சைவ மோங்கும் சிறுநகர் நாகர் கோவில்
வந்திடும் அடியார் வேண்ட வரைந்த இப்புகழின்மாலை
அந்தமிலருளால் கொண்ட அவாவினால் புனைந்த தென்று
சொந்தமாயுற்றுளோர்க்கு சொல்லியே பணிகின்றேனே.

## கோவிலும் சூழலும்

கம்பனின் சீமாவென்னுங் காணியை இடமாய்க் கண்டு
சிதம்பரர் இரகர் கொண்ட சிறுகோவில் உட்புகுந்து
தரம் ஐந்து கொண்டநாக வடிவமாய் மூர்த்தி யாகி
வரம்பல தந்து நாகர் வாழ்வித்த தெய்வம் நீயே.

வடக்கினில் கோயிலாக மாதுகண் ணகையும் நிற்க
குடக்கினில் பிள்ளையான பெரியதம் பிரானு மாக
குணக்கினில் குடாரப்பூர் குமரனும் காவல்சூழ
முனத்தினில் மகிழ்வினோடு மருதடியானும் போற்ற.

நயனுறுநாக கேணி நல்லருள் சம்புக் கேணி
பெயர்வுறு பெண்கள்கேணி பேசிடும் உப்புக்கேணி
உயர்வுறு மார்கழியின் உற்றிடு கேணியாக
பயனுறு கேணிஐந்து பக்கமாய் சூழ்ந்து நிற்கும்

மருதொடு அத்தி இத்தி மாவொடு புன்னை ஆத்தி
தருநிறை பனிச்சை ஆலும் சார்ந்திடும் இலுப்பையோடு
விரிதரு வேம்பு கொன்றை விளாசுர புன்னை நாவல்
குருகுகள் தங்கும் வீடாய் கொக்கட்டி கோயில் சூழும்

கருடனும் குயிலும் காகம் கதிஉயர் பருந்து கூகை
தருவினில் பொலியும் ஆலா மயில்கிளி குருகு மைனா
பருவிழி ஆந்தை கொக்குப் பயில்புறா கரண்டம் நாரை
அருகினில் பாடும் கீதம் அதிசய ராகம் ஆகும்.

வயலொடு வளமும் சார்ந்த வதிவிடத் துற்றுளோரும்
கயலுறு கடலும் சூழ்ந்த கரையிடத் துதித்துளோரும்
தயவென நாடும் கோவில் தம்பிரான் நாகமாகச்
சுயமெனத் தோன்றும் நாகலிங்கம்என்றுரைப்பர் மேலோர்.

இலகிடும் இலிங்கம் தன்னில் இடபமூர் எந்தை என்பர்
தலைமுறை காக்கும் காவல் கண்ணனே அவன்தான் என்பர்
சிலமுறை தன்னில் நாகர் தெய்வமே இது தான் என்பர்
குலமுறை காத்த ஐந்து தலையுடை நாகம் என்றார்

மாயவன் ஆகும் என்பார் மான்மழு தண்டங்கொண்ட
தூயவன் சிவனே என்பார் தோமிலா தலைகள் கொண்ட
நாயகன் பாம்பே என்பார் நாடினும் நாடொணாத
தேயமா நாகநாத நாகையா என்று தேர்ந்தார்

இவ்வகைத் தாய அன்பர் யாவரும் ஒருங்கு கூடி
சைவநல் ஒழுக்கம் கொண்ட சதாசிவர் பூசை கண்டு
செவ்விய விழாக்கள் நோன்பு புராணமும் முறையாய் பன்னி
இம்மையும் மறுமைக்காகும் இறைபணி செய்து வாழ்ந்தார்

# மூர்த்தியும் கீர்த்தியும்

## விருத்தம் - 1

ஆலாவும் கருடனும் அலறிடும் ஒலிகேட்டும்
அங்குகிங்கு லாவும் அரவே
அரனாரின் கழுத்திலே உறுவதால் உனக்கிந்த
அஞ்சாமை தான்வந்ததோ
வேலார் விழி புரை உமையவள் சிறுவிரல்
வியன் ஆழி ஆன இறையே
விந்தனாம் மாயவன் அறிதுயில் கொண்டிடும்
விரிபடக்குடையும் நீயே
சேலார் வயல் பொழில் சூழ்ந்திடும் நாகர்பதி
சேர்விடம் கொண்ட தேவா
சிறப்பான உன்திறன் செப்பிடும் முன்னவர்கள்
சிவனாகக் கண்ட வடிவே
பாலாகி நின்றுன்னை பணிந்தவர்கள் குறையாவும்
பரமனே போக்கி அருள்வாய்
படர்நாக விரிபடப் பாயலில் கண்வளர்
பதிநாக தம்பிரானே.

## விருத்தம் - 2

திருமேவு வளர்நாகர் பதிதனில் கோவில் கொள்
சிவனாரின் வடிவானவா
சிங்கார மாயனாம் திருமாலின் குடையதாய்
திகழ்கின்ற அரவானவா
அருள்மேவு பண்டிதன் சிற்றம்பலத்தனின்
ஆய்ந்தவுரை களிகொண்டவா
அண்ணாவி கணபதிப் பிள்ளையும் சின்னையன்
அருள்பாடல் ஒலி கேட்டவா
தரமான வெள்ளையன் புரியாத பாஷையும்
சலியாது மனம்கொண்டவா
சார்பாக பொன்னையன் பாம்புகொண் டோடிய
காட்சியும் நீ கண்டவா
உருமேவு சின்னப்பன் கூழையன் விருத்தமும்
உன்காதில் விழ நின்றவா
உற்றவா நாகநகர் வித்தகா பரமனாய்
உறுநாக தம்பிரானே.

## விருத்தம் - 3

தருவான மருதமர நீளலும் மணல்மேடும்
தாழ்வான வயலோடையும்
தங்கிடும் குளவாளை கேணியும் பள்ளமும்
தலைவனே உலவி வருவாய்
விரிவான சோலையாம் மருதத்தி கொக்கட்டி
விளா ஆத்தி பனை தென்னையும்
விழுதான ஆலுடன் இத்தியும் புன்னையும்
விளையாடி நடமாடுவாய்
சரிவான மார்கழிப் பள்ளமும் நாவலும்
சம்புசேர் குளமுமாக
சாய்ந்தாடும் ஆட்டமும் சேர்ந்தூரும் வண்ணமாய்
சரிந்ததால் பதிவானதோ
அரவான நகர்தன்னில் உறைவான தெய்வமே
அடியவர்க் அருள்தேவனே
அண்ணலே பரமனே ஆதியே ஐந்துதலை
அருள் நாக தம்பிரானே

## விருத்தம் - 4

ஆதிமல மூத்தபதி சோதிபர ஞானசிவன்
அணிந்திட்ட அரவும் நீயே
அம்மையின் ஆழியாய் சிறுவிரல் மேவிடும்
அழிவிலாப் பாம்பும் நீயே
சோதிசேர் மணி முடி தூயவன் மாயவன்
தூங்கிடும் பாயல்நீயே
சுந்தரப்பாற்கடல் கடைந்திடும் மத்திற்கு
சுற்றிய கயிறும்நீயே
கோதிலா மேருவை கோலியே கட்டிய
குதை வில்லின் நாணும் நீயே
குவலயம் யாவையும் விரிபடத் தாங்கிய
குலவுகட் செவியும்நீயே
ஏதிலா மாந்தரை சிறைபிடித்தேத்தவே
இடைபுகுந்தெமையாண்டவா
ஈசனே நாகநகர் மேவிஅருள்புரி யைந்து
தலைநாக தம்பிரானே.

## விருத்தம் - 5

போர்த்துக்கீசியர் எல்லாம் பொலிவான பண்டமும்
தாமுமாய் கப்பலேறி
பொங்கிடும் கடல்கவுத் தந்துறை ஊடாக
பொலிநாகர் பதியில் வந்து
ஆத்துக்காம் சரக்கான கறுவாவும் ஏலமும்
அரிதான பொருட்கள் எல்லாம்
அள்ளியே தருகின்றோம் எம்முடன் வாருங்கள்
என்றுமே பிடித்து ஏற்ற
வேர்த்துமே அவரெல்லாம் வெடவெடத்தோடவே
விரிபாயின் முடியின் மீது
வெம்மைகொள் சர்ப்பமாய் விளங்கியே காத்திட்ட்
விடநாக தனித்தெய்வமே
சூர்த்துமே வெள்ளையன் துடிதுடித் தோடவே
துரத்திடும் பாம்பு ஆகி
தூயனே காத்திட்ட தீரனே எமைஆண்ட
துரைநாக தம்பிரானே.

## விருத்தம் - 6

அரவடிவு கண்டவர் அலறியே ஓடவே

அருகினில் நின்ற அன்பன்

அடியனாம் தம்பி ஐயனும் உருவாட

அவன் மனத்துற்ற நீயே

பரமனது வாக்குஎன அரிசிமா நீருடன்

பதமான கலவை வாங்கி

பக்கமாய் வீசவே படிமத்தில் பட்டவர்கள்

பதியுளார் என்று சொற்றாய்

கரமது கூப்பிமேல் நாட்டவன் காலில்விழ

காத்துரட்சித்த வடிவே

கண்டஉன் அடியார்கள் கப்பலாய் விழாக்காண

கருணையைப் பொழி தெய்வமே

தரமான மருதமர குளவாளைக் கேணியும்

தங்கிநின்றாடல் செய்யும்

தம்பிரானே நாகநகர் தங்குதலை ஐந்து

சார் நாக தம்பிரானே

## விருத்தம் - 7

பூலோக தலமதில் பூர்வீகம் கொண்டதோர்

பொழில்நாக நகர் மேவிடும்

பொதுசனத் தாரிலே பொலிவான இளைஞரை

போர்த்துக்கேயன் பிடித்து

மேலாக தான்வந்த கப்பலில் ஏற்றவே

மிகுந்துள்ள சனங்க ளெல்லாம்

மேவியே நாகையா நாகையா என்றுமே

மிகையாக ஓலமிடவே

ஓடாது நின்றிட்ட பாய்மரத் துச்சியில்

ஓர்அரவு வடிவு கண்டு

ஓடியே வாளினால் வெட்டலும் வெருவவே

ஓராயி ரம்வடிவ மானாய்

மீளாது வடக்கனும் செய்வதொன்றறியாது

உன்னடியில் வீழ்ந்து பணிய

மிகு அன்பர் சிறைமீட்டு நிறைகாட்டி எமையாண்ட

விதிநாக தம்பிரானே.

# விருத்தம் - 8

## வேறு

சீரான கறுப்பன் வயல் வதிந்திட்டோரும்
சிறப்பினால் பிரிந்து வேறு உற்றுள்ளோரும்
பேரான கப்பல்விழா உற்றாரேனும்
பெய்தமாப் புள்ளிபட்ட அடியர்எல்லாம்
நேரான விழாசெய்ய வேண்டுமென்று
நீண்டுயர்ந்த சிந்தைவரு அன்பினாலே
தாரோடும் தடியாலே கப்பல் செய்து
சார்வெள்ளைத் துணியதனால் சுற்றிக்கட்டி
சோரான மூத்ததம்பி மறையர் வேலர்
கந்தையன் சடையர்சண் முகனும் கூடி
மாறாத பிறநாட்டார் வடிவுபோட்டு
மறக்காத பாஷைஒன்று பேசி ஆட்டி
சீராரும் கப்பலதன் கண்ணி ஏட்டை
சின்னையன் கணபதியும் சேர்ந்து பாட
ஆராத காதலுடன் அதனைப் பார்க்க
அமைகும்மித் தெருவிலுறை தம்பிரானே.

## விருத்தம் - 9

### வேறு

பெருமைசேர் கோவிலின் கீழ்இடைத் துண்டினில்
பெருமடியார் கூட்டம் ஆகி
பெரிதாகவே வேட்டைத் திருவிழாக் கொள்ளவே
பெயர்த்துனைத் தூக்கி வந்து
அருமைசேர் சுடலையின் பிட்டியில் பிள்ளையார்
அமர்கோயில் வேட்டையாடி
அங்குற்ற தும்பிமுகப் பிள்ளையும் நீயுமாய்
அருளுருக் காட்டி மீண்டு
திறமைமிகு சுந்தரி தலைமையில் காவடி
சேர்ந்திளைஞர் பலர்தூக்கியே
திடுதிடென பறைஅடித் திடவுந்தன் வாசலில்
சிங்கார நடம் பார்த்துமே
பரமதாய் உறைகின்ற பாம்புருத் தெய்வமாய்
பதியுளோர் குறைகள் போக்கும்
பண்ணவா பரமனே படம்ஐந்து தலைகொண்ட
பதிநாக தம்பிரானே.

## விருத்தம் - 10

குடாரப்பில் உள்ளோரும் கோணப்பா மைந்தரும்
குணசதாசிவ பூசரும்
குன்றாத நாதியரும் ஒன்றாக சேர்ந்துமே
குலவு சப்பறம் ஏற்றியே
விடாதப்பு நிலைகொண்ட வயல்சூழும் மருதமும்
விரிவான பாலை நிலமும்
வித்தகா நீதங்கு கோயிலாய் கொண்டுமே
வினைதீர்த்து அருள் செய்குவாய்
படாதிட்ட பாடெலாம் பட்டாலும் உன்விழா
பதமாக செய்யும் அன்பர்
பவவினைகள் போக்கியே அவர்மேன்மை ஏற்றியே
பாரினில் சிறக்க வைத்தாய்
கடாமுட்டின் மீதேறி வருகாலன் அணுகாமல்
காத்திடும் காலகாலா
கருநாகம் தீண்டினும் வினையேதும் இல்லாமல்
காக்கின்ற தம்பிரானே.

## விருத்தம் - 11

வடபாலின் குணபாலும் குடபாலும் கூடிய
வதிவான மக்கள் எல்லாம்
வலுவான விழாவாக தீர்த்தம் சிறக்கவே
வாகான அலங்காரமும்
குடமான பாலுடன் அபிஷேக முறைகளும்
குறைவின்றி நிறைவாகவே
கூட்டுமே எங்களும் குழல்நாக சின்னமும்
கொட்டி முழங்கியிடவே
திடமான நாட்டியம் பாட்டுடன் கச்சேரி
தீர்ந்திடும் விடிவேளையில்
சிங்காரப் பூந்தண்டி ஏற்றியே காவியே
திரைகடல் தீர்த்தம் ஆடி
படமான ஐந்துதலை விடநாக தெய்வமே
பதியுற்று ஊஞ்சல் ஆடி
பதமாக கண்வளர் பதிநாக நகர் மேவும்
பயில்நாக தம்பிரானே.

## விருத்தம் - 12

பாம்பினால் கடியுண்ட பதியிலுள் ளவரெலாம்
பணிவுடன் ஓடிவந்து
பக்கமாம் குளவாளை கேணியில் மூழ்கியே
பரமனே தஞ்சம் என்று
கூம்பிய கரத்துடன் கும்பிட்டு வேண்டவே
குருக்களாய் உள்ள பேர்கள்
கோயிலுள் சென்றுமே மூலவர் உறையுளில்
கொடுவரும் மண்ணையுண்டும்
காம்பினைக் கட்டியே கடிவாயில் பூசியும்
கதியென நிற்கும் அன்பர்
கடுவிடம் போக்கியே கண்கண்ட தெய்வமாய்
காத்திடும் நாகநாதா
தேம்பியே நிற்பவர் சிந்தையில் நினைப்பவர்
சிறந்த உன் வாசல் வந்தால்
சேர்ந்திடும் வினையெலாம் தீர்த்திடும் ஐந்துதலை
சீர்நாக தம்பிரானே.

## விருத்தம் - 13

நல்லபாம்புருவான தெய்வமாய் உற்றநீ

நம்பினார்க்குதவி செய்ய

நறுமணம் இல்லாமல் ஒருமணம் பரப்பியே

உறைவது நாசி சேர்ப்பாய்

சொல்லவே அஞ்சிடும் சுடுசீற்ற ஒலிசெய்து

சுந்தரக் காதில் விடுவாய்

சோதியாய் படம்விரித் தாடியே பயம் காட்டி

சுத்திவிழி யூடுபுகுவாய்

எல்லைதீர் போதினில் இதைஎண்ணா தீயவர்

இறைபக்தியோடு வாழ

எண்ணியே உன்பதம் நண்ணியே வரஉன்னி

இறைவ நீ ஆடல் புரிவாய்

முல்லைசேர் மருதத்தியொடு நாவல் வேம்புடன்

முழசம்பு கொக்கட்டியாய்

முறையான சோலையில் உருவான கோவிலில்

உறைநாக தம்பிரானே.

# காவல் தெய்வங்கள்



## மருதடி வைரவர் மீது பாடியது

### விருத்தம்

அந்தமில் கொக்கட்டி ஆலோடு மருதத்தி
ஆரணியம் ஆன இடமோ
அழியாத மண்கும்பி மார்கழிப் பள்ளமும்
அருகுற்ற குளம் கேணியோ
பந்தம் அறுத்தருள் படநாக வாசலோ
பதிமேவு வயல் ஓடையோ
பார்த்துமே காத்திடும் காவலாம் சூலமும்
படியெலாம் காணும் வகையோ
இந்தவிடம் வெளியாக எங்கும்நீ காணவே
எப்பக்கம் தெரியு மாறும்
இருக்கின்ற கோலமே கனவில்வந் தெங்கட்கு
இனிய அருள் செய்த தீரா
சொந்தவிடமாகவே நாகநகர் குடாரப்பு
சுற்றியே நிற்கும் வீரா
சோதியே உத்தண்ட காலனே சூலனே
தோமில் வயிரவ தேவனே.

## வடபாலில் அமர்ந்துள்ள கண்ணகை அம்மன் மீது பாடியது



### விருத்தம்

வடபாலில் நரசிங்கம் தென்பாலில் நாகையா
வலிமையாய் சேர்ந்திருக்க
வரிமணல் திட்டிலே மரநாவல் சூழலில்
மாதுநீ கோவில் கொண்டாய்
குடபாலில் உள்ளோரும் குணபாலில் வதிவோரும்
கூத்தாடும் வட பாலரும்
கூடியே பொங்கலும் பூசையும் செய்துபின்
குளிர்ந்தருள என்று பாட
குணமான உடுக்குடன் கைத்தாளம் சல்லரி
கொண்டுளோர் கூடிப்பாட
கொடுநோய்கள் பிணியெலாம் ஓடியே போகவே
கோதைநீ அருள்செய்குவாய்
மணமான நிறைமாதர் குடமேந்தி நீர்கொண்டு
மலர்வாசல் சுற்றி ஊற்ற
மகிழ்ந்துமே நாகநகர் உறையும்சிங் காரியே
மாதுகண் ணகையம்மனே

## கிழக்கிலுள்ள சுடலைப் பிட்டி பிள்ளையார் மீது பாடியது



### விருத்தம்

திருநாகர் இடைத்துண்டில் சேர்வீதி ஓரமாய்
திகழ்கின்ற சுடுகாடுதான்
சேர்ந்துநீ இருந்திடச் சிறந்தவிடமெ ன்னவே
தேர்ந்திட்ட தேவ பாலா
குருவான கணபதிப் பிள்ளையின் சேவையில்
கோயில் கொண் டருளும் நாதா
குன்றாத கண்டலும் இலுப்பையும் நாவலும்
கொட்டுங்காய் மரமும் நீயே
தருவான சோலையுள் இடைபோகும் வீதியும்
சம்புசேர் நிலமும் உந்தன்
தாங்கிடும் மூஷிகம் ஏறியே உலவிடும்
தந்திமுகம் ஆன வடிவே
கருவான உயிர்யாவும் கருணைசெய் மெய்யனே
கற்றவர்க் குற்ற துணையே
கதிஞான ஓங்கார கரம்ஐந்து தனிக்கொம்பு
கஜமா முகக் கடவுளே.

## மேற்கிலுள்ள கறுப்பன் வயல் பெரியதம்பிரான் மீது பாடியது



### விருத்தம்

திருவளரும் நாகநகர் கறுப்பன்வயல் தன்னில்
சிங்காரச் சிறுகோ விலில்
சிறந்தபல அற்புதத் தெய்வமாய் ஊர் காக்கும்
சீர்பெரிய தம்பி ரானே
தரமான தம்பை யன் பூசையில் தனியாக
சார்ந்தோங்கி உயர்வானவா
தங்கள்குறை நீக்கவென ஆயிரம் மோதகம்
தந்தவர்கள் துணையானவா
விரிவான விரதம்மதை மூவேழுநாட்களும்
வினையெலாம் போக என்றே
வித்திடும் அடியவர்கள் புத்தியில் உறைகின்ற
வேழமுக மானபொருளே
பருமான கேடகப் பந்தலில் வைத்துன்னை
பாலர்நாம் தூக்கி வந்து
பாங்கான குளமதில் நீராட்டிப் பணிகின்றோம்
பார்பெரிய தம்பிரானே

## கிழக்கில் உள்ள குடாரப்பு முருகமூர்த்தி மீது பாடியது



### விருத்தம்

சீரோங்கு குடாரப்பூர் சேர்ந்தமர் தெய்வமே
சிங்கார முருகையனே
சேர்ந்தோரைக் காத்தருள் சிறப்பான கந்தனே
சிந்தையில் குடிகொண்டவா
பருமான உயர்மேனி அப்பாவின் பிள்ளையின்
பணியிலே உயர்வானவா
பாங்கான அவர்மகன் சிதம்பரப் பிள்ளையின்
பாடலில் களிகொண்டவா
தரமான பூசகன் இலட்சுமண உடையாரின்
தகுபூஷை முறைகண்டவா
தட்டார்கள் குடியினில் உற்றவர்கள் கண்டதோர்
தனியான குலதெய்வமே
வரமான குடவூரை வாழ்விக்கும் முருகனே
வண்ணமயில் மீதிலேறி
வந்தெம் மனத்திலே உந்தும்வினை போக்கி
வரமருள் வடிவேலனே.

## நாகர்கோவில் வடக்கு கரையூர் முருகையன் மீது பாடியது



### விருத்தம்

சீரேறு வடநாகர் பதியின் கிழக்கிலே
திடலான மணற்கும்பியில்
சிறப்பான நாகமுத் தன்பனின் சேவையில்
சிறுகோவில் உட்புகுந்து
பாரேறு பண்புடை முருகுப்பிள்ளையின்
பாட்டும் புராண இசையும்
பதமான கணேசையர் பூசையும் வேண்டலும்
பரிந்துளம் கொண்டமுருகா
தாரேறு தும்பை மலர் தடமார்பு கொண்டசூர்
சம்மார சட்டிதன்னில்
தகுநோன்பு கொண்டவர் பெருவிழா கண்டிட்ட
சண்முகமான வடிவே
காரேறு சிறுதம்பி உற்றுள்ளோர் கட்டிய
கவின் கோவில் சார்ந்தணைந்து
கரங்கூப்பும் அடியவர் பவம் போக்கி அருள்புரி
கரையூரின் முருகையனே.

## பனுவலின் பலன்

## வெண்பா


படிக்க பவமகலும் பாடப் பிணியகலும்
முடிக்க முன்னியது வந்தணையும் - நாக
படத்துறையும் பண்ணவனின் பாமாலை கேட்க
விடந்தணியும் வேதனையும் போம்.

### வேறு

நந்தம் குலவிளக்கை நாகநகர் மெய்ப்பொருளை
சிந்தும் விடநாக தெய்வத் திருமணியை
புந்தியிலே வைத்து புடையராய் துன்னி நிற்போர்
இந்தப் புவி வாழ்வில் எண்ணியது எய்துவரே.

### முற்றும்

**நாகதம்பிரான் திருவடிகள் வாழ்க.**





## நூலாசிரியரைப்பற்றி.....

சைவ நெறியும் தமிழ் புலமையும் மிக்க பௌராணிகர் பரம்பரையில் குடாரப்பில் பிறந்தவர் சிதம்பரப்பிள்ளை பசுபதி. சிறந்த தமிழ், சைவ, நகைச்சுவை, பட்டிமன்ற பேச்சாளராகவும், இசை நாடக நடிகராகவும், எழுத்தாளராகவும், மரபுவழிக்கவிதை புனையும் வல்லுனராகவும், வில்லிசையாளராகவும், புராணங்களுக்கு பயன் விரித்துரைக்கும் பௌராணிகராகவும், சிறந்த அரச உயர் அதிகாரியாகவும் பல துறைகளில் தன்னை வெளிப்படுத்தியவர். தெய்வங்கள் மீது இவரால் பாடப்பட்ட விருத்தப்பாடல்கள் பலராலும் பாராட்டப்பட்டவை. நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் மீது மிகுந்த பற்றுக் கொண்டு பாடிய இப் புகழ்மாலை சிறந்த முயற்சியாகும். நாம் மறந்த பல விடயங்களை தனது பாடல்களில் நினைவுபடுத்தி நாகதம்பிரானின் சிறப்பினை கூறியமுறை பாராட்டுக் குரியது. இந் நூலினால் கிடைக்கும் சன்மானம் யாவும் நாகதம்பிரானின் திருப்பணிக்கு அர்பணித்துள்ளமையை பெருமையுடன் ஏற்றுக்கொள்கின்றோம். மேலும் இது போன்ற பல நூல்கள் இவரிடமிருந்து கிடைக்க நாகதம்பிரானின் திரு அருள் என்றும் கிட்டுவதாகுக.

தலைவர் / செயலாளர் / பொருளாளர்
பரிபாலனசபை
நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயம்

Global Computer Printers, Saraiady, Point Pedro. T.P No: 021 321 9542